## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 9 ஆம் பிரிவின் பிரகாரம் சரக்குகள் கிரயம் மற்றும் தேறிய கைக்கிட்டிய பெறுமதி ஆகியவற்றில் குறைந்ததில் அளவிடப்பட வேண்டிய போதிலும் சரக்குகளில் சேர்க்கப்பட்ட உதிரிப்பாகங்களின் தேறிய கைக்கிட்டிய பெறுமதி வலையமைப்பால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் அவை நிதிக்கூற்றுக்களில் ரூபா 17,146,371 கிரயத்தில் | களஞ்சியங்களில் பேணப்படுகின்ற குறித்த சரக்குகள் உற்பத்தி அல்லது மீள்விற்பனைக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இலாபத்தை ஈட்டும் நோக்கமொன்றை கொண்டிருக்காமல் நுகர்வுக்காக மாத்திரம் இது பேணப்பட்டது. வலையமைப்பின் தேவைப்பாட்டின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுகின்றதுடன் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சரக்குகளின் பெறுமதி அறிக்கையிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தன. | இச் சரக்குகள் களஞ்சியங்களில் நீண்ட காலமாக வைக்கப்பட்டிருக்காததால் அது கிரயத்தில் காட்டப்பட்டது. | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 13 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல்லும் பெறுமதி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 1,652,337,093 பெறுமதியான சொத்துக்கள் வலையமைப்பால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கொண்டுசெல்லும் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எல்கேஎஸ் 16, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நியமமத்தின் 79 (ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. softcopy ஒன்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் அரசாங்க மானியங்கள் அதனுடன் தொடர்புடைய பெறுமானத்தேய்வு கிரயத்தை இனங்காணும் நேரத்தில் வருமானமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது வசந்தம் தொலைக்காட்சியிலிருந்து பெறப்பட்ட ரூபா 5,100,000 அரசாங்க மானியம் பெறுமானத்தேய்வு கிரயத்துடன் தொடர்புடைய வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க மானியங்களில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் காலக்கழிவு அத்தகைய சொத்துக்களின் (எஸ்எல்ஏஎஸ் 18) பயன்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றதுடன் வலையமைப்பின் பெறுமானத்தேய்வுக் கொள்கையின் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டை தொடர்ந்துவரும் ஆண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. குறித்த கொள்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது (2020) வசந்தம் தொலைக்காட்சிக்கு கிடைத்த மானியங்கள் 2021 ஆம் ஆண்டில் காலக்கழிவிடப்படும். அதற்கிணங்க வலையமைப்பின் கணக்கீட்டு நோக்கத்திற்காக பொதுவான கொள்கையொன்று பயன்படுத்தப்பட்டு அதற்கிணங்க கணக்கீட்டு நடவடிக்கைகள் | மூலதன மானியங்கள் பெறுமானத்தேய்வு கிரயத்துடன் தொடர்புடைய வருமானமாக இனங்காணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சரியாக மேற்கொள்ளப்பட்டன என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் அரசாங்க வரி மானியங்களுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட மாதத்திலிருந்து வலையமைப்பால் அவை பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வுக் கொள்கை தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகளின் 2.8.1 இன் கீழ் பெறுமானத்தேய்வுக் கொள்கை காட்டப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வுக் கொள்கை தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) வலையமைப்பின் பெறுமானத்தேய்வுக் கொள்கையின் பிரகாரம் இயந்திரங்களின் பயன்தரு ஆயுட்காலம் 2 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை காணப்பட்ட போதிலும் (பெறுமானத்தேய்வு சதவீதம் 6.67% மற்றும் 50%), ITN T.V இன் ரூபா 421,567,609 கிரயமான இயந்திரங்கள் மற்றும் லகந்த வானொலியின் ரூபா 1,058,945 கிரயமான தொலைபேசி hybrid முறைமை என்பன பெறுமானத்தேய்வுக் கொள்கைக்கு முரணாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன. | தற்போது, பெறுமானத்தேய்வு தொகைகள் வருடாந்தம் சரிபார்க்கப்பட்டு அதற்கிணங்க பெறுமானத்தேய்வு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால் பெறுமானத்தேய்வு சதவீதங்கள் மாற்றப்படுகின்றதுடன் அவை சரியாக கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதை தெரிவிக்க முடியும். | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த கொள்கையின் பிரகாரம் பெறுமானத்தேய்வுகள் கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) வலையமைப்பின் பெறுமானத்தேய்வுக் கொள்கையின் பிரகாரம் அலுவலக உபகரணங்கள் கிரயத்தில் 25 சதவீதம் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் குறித்த கொள்கைக்கு முரணாக 2014 ஆம் ஆண்டில் சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசையால் ரூபா 85,150 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் 12.5 | கையடக்க தொலைபேசிகளின் பெறுமானத்தேய்வு சதவீதம் 12.5 சதவீதமாக இருந்தது, ஏனெனில் கையடக்க தொலைபேசிகள் முன்னைய ஆண்டுகளில் தளபாடம் மற்றும் பொருத்துக்களின் கீழ் காட்டப்பட்டன. பின்னர் அலுவலக உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டு 25 சதவீத பெறுமானத்தேய்வு விகிதத்தின் பிரகாரம் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த கொள்கையின் பிரகாரம் பெறுமானத்தேய்வுகள் கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதத்தில் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய அச் சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 13,305 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | வலையமைப்பின் பெறுமானத்தேய்வுக் கொள்கையின் பிரகாரம் கட்டிடங்களின் பயன்தரு ஆயுட்காலம் 20 வருடங்களாக காணப்பட்ட போதிலும் லகந்த வானொலியால் ஆயுட்காலம் 25 ஆண்டுகளாக கருதப்பட்டு பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 64,683 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் பெறுமானத்தேய்வு விகிதங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்காததன் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டிடத்தின் பெறுமதி ரூபா 1,044,263 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கீழ் லகந்த வானொலி இருந்த காலப்பகுதியில் கருதப்பட்ட ஆயுட்காலம் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பினால் அவை கையேற்கப்பட்ட பின்னர் மாற்றப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த கொள்கையின் பிரகாரம் பெறுமானத்தேய்வுகள் கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | வலையமைப்பின் பெறுமானத்தேய்வுக் கொள்கையின் பிரகாரம் அலுவலக உபகரணங்கள் கிரயத்தில் 25 சதவீதம் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் அலுவலக உபகரணங்களின் பெறுமானத்தேய்வுக் கணிப்பீட்டிற்காக லகந்த வானொலியால் வெவ்வேறு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இதன் விளைவாக, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா 260,578 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | 2012 ஆம் ஆண்டு முதல் கணக்கீட்டு நியமங்கள் மாற்றப்பட்டுள்ளன. IFRS நியமங்களின் பிரகாரம் பெறுமானத்தேய்வு விகிதம் அத்தகைய சொத்துகளின் ஆயுட்காலத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்பட வேண்டும். ஆகையால் ஒவ்வொரு சொத்தினதும் ஆயுட்காலத்தின் பிரகாரம் விகிதங்கள் வேறுபடுகின்றன. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த கொள்கையின் பிரகாரம் பெறுமானத்தேய்வுகள் கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமூக வலையமைப்பின் மூலமான 2019 திசெம்பர் மாதத்திற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்படுத்தலிற்காக வங்கி அட்டை மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 202,309 தொகையான கொடுப்பனவுகள் மீளாய்வாண்டுக்கான செலவினங்களாக காட்டப்பட்டுள்ளன. இதன் விளைவாக, வணிக மேம்படுத்தலிற்கான செலவினம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சமூக வலையமைப்பு மூலமான நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்படுத்தலிற்காக வங்கி அட்டை பயன்படுத்தப்படுகின்றதுடன் முன்னைய ஆண்டின் பிற்பகுதி மாதங்களிற்குரிய இந்த அட்டையின் செலவினங்கள் தொடர்ந்துவரும் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. ஆண்டின் இறுதியில் சரியாக சீராக்கங்களை மேற்கொள்வதற்காக குறித்துக்கொள்ளப்படுகின்றது. | ஆண்டிற்குரிய செலவினங்கள் ஆண்டிற்கான செலவினங்களாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | ஒரே கடன்பட்டோரின் ஒரே கொடுக்கல் வாங்கலிற்காக வலையமைப்பால் இரண்டு பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருந்ததுடன் குறித்த கடன்பட்டோரால் செலுத்தப்பட்ட ரூபா 2,427,600 தொகை ஒரு கணக்கிற்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, கடன்பட்டோர் மீதி மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் என்பன நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி மற்றும் டேவிட் பீரிஸ் கம்பனி என்ற பெயரில் ஒரே ஒப்பந்த இலக்கத்தின் கீழ் இரண்டு கணக்குகள் உருவாக்கப்பட்டு, ஒரு கணக்கில் பெறவேண்டிய மீதியும் மற்றைய கணக்கில் செலுத்த வேண்டிய மீதியும் காட்டப்பட்டது. ஆகையால் குறித்த தொகையானது மொத்த கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கின் மீதிக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்காததுடன் எதிர்காலத்தில் குறித்த தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | ஏற்பட்ட தவறு சீர்செய்யப்பட்ட பின்னர் கடன்பட்டோர் மீதி சரியாக காட்டப்பட வேண்டும். |
| (இ) | கடன்பட்டோர் கணக்கொன்றிற்கு மேலதிகமாக பதிவு செய்யப்பட்ட ரூபா 2,780,184 தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கடன்பட்டோரின் பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அதிகரித்துக் காட்டப்பட்ட கணக்குகளிலிருந்து ரூபா 2,780,184 ஆன குறித்த தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | அதிகரித்துக் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதிகள் சீர்செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | Transmitters இன் பெறுமானத்தேய்வு வெவ்வேறு பெறுமானத்தேய்வு விகிதங்களைப் பயன்படுத்தி வசந்தம் F.M ஆல் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது, இதன் விளைவாக, ரூபா 8,829,701 கிரயமான transmitters இன் பெறுமானத்தேய்வு ரூபா 534,635 ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | IFRS கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் பெறுமானத்தேய்வு விகிதங்கள் ஒவ்வொரு சொத்தினதும் ஆயுட்காலத்தின் பிரகாரம் வேறுபடுகின்றன. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கையின் பிரகாரம் பெறுமானத்தேய்வுகள் கணிப்பிடப்பட வேண்டும். |
| (உ) | மாதிரி கணக்காய்வு பரிசோதனைக்காக வலையமைப்பின் சந்தைப்படுத்தல் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 78,800,337 கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 7,193,327 கடன்பட்டோர் மீதி எதிர் வணிக (contra deal) கொடுக்கல் வாங்கல்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் உரிய சேவைகள் பெறப்பட்டு அக் கொடுக்கல் வாங்கல்கள் மூடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், குறித்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஆவணங்கள் மாற்றப்பட்டிருக்காத காரணத்தினால் அப் பெறுமதி இன்னும் கடன்பட்டோர் மீதியில் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, கடன்பட்டோரிற்கு உரித்தில்லாத ரூபா 7,193,321 தொகையான பெறுமதி கடன்பட்டோராக காட்டப்பட்டிருந்தது. | ஏனைய வர்த்தக நிறுவனங்களுடனான பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தில் இருந்து எதிர் வணிக கொடுக்கல் வாங்கல்கள் ஏற்படுகின்றதால் குறிப்பிட்ட வருடத்திற்குள் விலைப்பட்டியல்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. ஆகையால் தொடர்ந்துவரும் ஆண்டுகளில் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலை பூர்த்தி செய்ததன் பின்னர் உரிய கணக்குகளுக்கு பதிவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | எதிர் வணிக கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஆவணங்கள் முறையாக பேணப்பட வேண்டியதுடன் கணக்கு பதிவுகள் சரியாக காட்டப்பட வேண்டும். |
| (ஊ) | 2011 ஆம் ஆண்டில் ரூபா 1,037,763 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 12 ஆங்கிலத் திரைப்படங்களை கற்பனை சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அவை முற்பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | இத் தொகை திரைப்படங்களுக்காக செலுத்தப்பட்ட முற்பணமாகும். இத் திரைப்படங்கள் பிறைம் ரேடியோவில் ஒளிபரப்பு செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டதுடன் அந்த அலைவரிசை இடைநிறுத்தப்பட்டதால் அதை ஒளிபரப்ப முடியாதிருந்தது. மேலும் இத் திரைப்படங்கள் ஏனைய அலைவரிசைகளில் ஒளிபரப்புவதற்கு பொருத்தமானதாக இருக்கவில்லை, இதன் | நிதிக்கூற்றுக்களில் கற்பனை சொத்துக்களை சரியாக காட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விளைவாக அந்தத் திரைப்படங்களை ஏனைய அலைவரிசைகளில் ஒளிபரப்ப முடியாதிருந்தது. இத் திரைப்படங்களுக்கு இணங்கப்பட்ட காலப்பகுதி முடிவடைந்திருந்தது. | |
| (எ) | ரூபா 5,000,000 பெறுமதியான குறுங்கால நிலையான வைப்பு தொடர்பான வட்டி வருமானம் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை, இதன் விளைவாக, ஆண்டுக்கான வருமானம் மற்றும் பெறவேண்டிய வட்டி வருமானம் என்பன ரூபா 1,097,245 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | கேள்வி தொடர்பான இவ் வைப்பு 2013 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் வட்டியுடன் மீதி உறுதிப்படுத்தப்பட்டது. இவ் வட்டி வருமானம் 2013 ஆம் ஆண்டிலிருந்தான காலப்பகுதிக்கான வட்டியாக காணப்பட்டதுடன் இது ஒரு வருடத்திற்கான வட்டி அல்ல. கேள்வி தொடர்பான இவ் வைப்பின் வட்டி வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்காததுடன் வைப்பு பணமாக்கப்படும் போது வட்டி வருமானம் பெறப்படுகிறது. ஆகையால் குறித்த வட்டியை கணக்கிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்ததுடன் வைப்பு வட்டி வருமானம் மீளப்பெறப்படும் போது கணக்குகளிற்கு எடுத்துக் கொள்ளப்படும். ஆகையால் இது சரியாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவினம் சரியாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஏ) | வலையமைப்பின் சந்தைப்படுத்தல் பிரிவு செயற்படுகின்ற பௌத்தலோக மாவத்தை கொழும்பு 7 இல் அமைந்துள்ள காணிக்கு செலுத்த வேண்டிய நிலுவை குத்தகை வாடகை ரூபா 42,300,000 ஆக காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 40,400,000 ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான குத்தகை வாடகை ஏற்பாடு ரூபா 1,900,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | குத்தகை வாடகைக் கணக்கின் ரூபா 8,273,200 தொகையான ஆரம்ப மீதியில் இக் குத்தகை வாடகை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் குத்தகை வாடகை சரியாக கணக்குகளிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்க முடியும். | குத்தகை வாடகை செலவினங்கள் சரியாக கணக்குகளிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் ஏடுகள்

| | விடயங்கள் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடை ய ஏட்டின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வசந்தம் ரீ.வியின் சேவைநாடுநர் கடன்பட்டோர் மீதி | 170,113,862 | 184,581,604 | 14,467,742 | வசந்தம் ரீ.வி. அலைவரிசையின் கடன்பட்டோர் மீதியாக காட்டப்பட்ட ரூபா 170,113,862 தொகையான பெறுமதியானது எதிர்மறை மீதிகளிற்கு சீராக்கம் செய்யப்பட்ட பின்னரான தேறிய பெறுமதியாகும். எதிர்மறை மீதிகள் நீக்கப்பட்ட பின்னர் கடன்பட்டோரின் உண்மையான பெறுமதி ரூபா 184,581,604 மில்லியனாக காணப்பட்டது. ஆகையால் ரூபா 14,467,742 கடன்பட்டோர் பெறுமதி எதிர்மறை மீதியொன்றாக காணப்பட்டதுடன் அதற்கிணங்க கடன்பட்டோர் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சரியாக கட்டப்பட்டிருந்தது என்பதை தெரிவிக்க முடியும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளை நிரூபிக்கக்கூடிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான செலவினங்கள் | 62,072,681 | 61,022,297 | 1,050,384 | ஊழியர் சேமலாப நிதிய பதிவேட்டிலிருந்து பெறப்பட்ட ரூபா 61,022,297 தொகையான பெறுமதியானது சம்பள மென்பொருள் முறைமையின் பிரகாரம் திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட சம்பள பெறுமதியாகும். நிதிக்கூற்றுக்களின் | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளை நிரூபிக்கக்கூடிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிரகாரம் ஊழியர் சேமலாப நிதிய செலவினங்களை பெற்றுக்கொள்ளும் போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பானது 2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான நிலுவை சம்பளங்கள் மற்றும் விடுமுறை தின கொடுப்பனவுகளிற்காக செலுத்தப்படுகின்றதுடன் தொடர்புடைய ஆண்டிற்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>ஆகையால் இது ஊழியர் சேமலாப நிதியத்தின் செலவினங்களிற்கும் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு பதிவேட்டின் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக இருக்கலாம். ஊழியர் சேமலாப நிதிய செலவினங்கள் சரியாக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டன. | |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியத்தின் செலுத்த வேண்டிய தொகை | 8,732,149 | கணக்காய்வால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் ரூபா 7,797,848 | 934,301 | ஊழியர் சேமலாப நிதிய கொடுப்பனவு 2020 ஆம் ஆண்டிற்கான நிலுவை சம்பளங்கள் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுகளிற்காக மேற்கொள்ளப்படுகின்றது. ஆகையால் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் சரியாக கணிப்பிடப்பட்டது என்பதை தெரிவித்துக் | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளை நிரூபிக்கக்கூடிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கொள்கின்றேன். | |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கான செலவினங்கள் | 12,341,561 | 12,204,460 | 139,101 | ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பதிவேட்டிலிருந்து பெறப்பட்ட ரூபா 12,204,460 தொகையான பெறுமதியானது சம்பள மென்பொருள் முறைமையின் பிரகாரம் திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட சம்பள பெறுமதியாகும். நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய செலவினங்களை பெற்றுக்கொள்ளும் போது ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பானது 2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான நிலுவை சம்பளங்கள் மற்றும் விடுமுறை தின கொடுப்பனவுகளிற்காக செலுத்தப்படுகின்றதுடன் தொடர்புடைய ஆண்டிற்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால் இது ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் செலவினங்களிற்கும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பங்களிப்பு பதிவேட்டின் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக இருக்கலாம். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளை நிரூபிக்கக்கூடிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (உ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் செலுத்த வேண்டிய தொகை | 1,056,896 | கணக்காய்வால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் ரூபா 947,134 | 109,762 | ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய கொடுப்பனவு 2020 ஆம் ஆண்டிற்கான நிலுவை சம்பளங்கள் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுகளிற்காக மேற்கொள்ளப்படுகின்றது. ஆகையால் செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் சரியாக கணிப்பிடப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளை நிரூபிக்கக்கூடிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.5.5 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டிற்கான வலையமைப்பின் உரிமை மூலதனம் ரூபா 3,198,499,721 ஆக காணப்பட்டதுடன் இது 2020 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 107,189,266 முதல் ரூபா 226,860,960 வரை தொடர்ச்சியாக நட்டங்கள் ஏற்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் நட்டம் ரூபா 210,623,700 ஆக காணப்பட்டதுடன் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் கீழ் ITN FM, வசந்தம் FM ஆகியவற்றால் ஏற்பட்ட நட்டங்கள் முறையே ரூபா 52,557,304 மற்றும் ரூபா 13,177,729 ஆக காணப்பட்டன. எனினும் வசந்தம் தொலைக்காட்சியால் ஈட்டப்பட்ட இலாபம் ரூபா 62,384,227 ஆகும். அதற்கிணங்க 2020 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் மொத்த நட்டம் ரூபா 213,974,507 ஆக காணப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நட்டங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.6 கணக்காய்விற்கு ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| விடயம் | தொகை | வழங்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ரூபா 226,926,032 தொகையான இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதிகளிற்கான வயதுப் பகுப்பாய்வு தொடர்பான | 226,926,032 | மீதி முன்கொண்டு வரப்பட்ட காலப்பகுதியை இனங்காண்பதற்கு விபரமான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டி | இரண்டு வருடங்களுக்கும் மேலாக நிலுவையாகவுள்ள மீதிகள் 2001 ஆம் ஆண்டிலிருந்து வருகின்றன. அம் மீதிகள் 2001 ஆம் ஆண்டு முதல் 2018 | கடன்பட்டோரின் வயது பகுப்பாய்வை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | ருக்கவில்லை. | ஆம் ஆண்டு இறுதி வரையான 17 வருட காலமாக உள்ளன என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டியவைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வான் காலத்தின் விற்பனைக்காக அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 9,869,852 தொகையை அறவீடு செய்வதற்காக சேவைநாடும் கடன்பட்டோரிற்கு எதிராக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியால் ஏழு வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 6,652,442 பெறுமதியான 4 வழக்குகள் அழைப்பாணைகளை ஒப்படைக்க முடியாதிருந்ததன் காரணமாக முடிவுறுத்தப்பட்டிருந்தன. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 266,926,032 ஆக காணப்பட்டது, அதில் 4 சதவீதம் மாத்திரமே அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | நீண்டகாலமாக எங்களிடம் ஒப்பந்தம் செய்திருந்த முகவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விளம்பரங்கள் தொடர்பான நிலுவைத் தொகைகளுக்கு அல்லாமல் வேறு வழிகளில் அறவீடு செய்யப்பட முடியாதிருந்த நிலுவைத் தொகைகளுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அத்தகைய முகவர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தி பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதுடன் ஒளிபரப்பு செய்வதில் ஏற்பட்ட சிக்கல்களின் விளைவாக அத்தகைய பணம் நிறுத்திவைக்கப்பட்டது. எங்கள் நிறுவனம் வழங்கிய கடனில் இருந்து ஏறக்குறைய 98 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதுடன் சட்ட நடவடிக்கைகளின் மூலம் அறவிடப்படக்கூடிய மீதமுள்ள வழக்குகள் சட்டப் பிரிவிற்கு அனுப்பப்படுகின்றன. மேலும் மீதிகள் 2001 ஆம் ஆண்டிலிருந்து உள்ளதுடன் இத் தொகை 1 சதவீதம் முதல் 2 சதவீதம் வரையான விச்சில் உள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | சேவைநாடும் கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான எதிர் வணிக கடன்பட்டோர் மீதி ரூபா 26,102,280 ஆக காணப்பட்டதுடன் வலையமைப்பால் தொடர்புடைய சேவை பெற்றுக்கொள்ளப்படாததன் விளைவாக 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட எதிர் வணிக கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா | எதிர் வணிக கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விலைப்பட்டியல்கள் மற்றும் ஆவணங்கள் கிடைக்காததன் காரணமாக இத் தொகைகளை கணக்குகளுக்கு எடுப்பதிலும் ஏனைய மேலதிக நடவடிக்கைகளிலும் சிக்கல் காணப்பட்டது. | எதிர் வணிக கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முறையான ஆவணங்களைப் பேணுவதற்கும் உரிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

14,641,728 ஆக காணப்பட்டதுடன் நட்டக்கழிவு சீராக்கம் முழுத் தொகைக்கும் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 5 ஆண்டுகளுக்கு குறைவான ரூபா 18,866,794 மீதி, 05 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 16,108,606 மீதி மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 28,954,081 மீதி என்பன நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 63,929,480 பிற்போடப்பட்ட வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிலும் அம் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த ஆண்டின் கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது அதே தொகையால் நட்டம் குறைவடைவதை அல்லது இலாபம் அதிகரிப்பதை விளைவிக்கும். | பிற்போடப்பட்ட வருமான மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 137,772,746 சேவைநாடுநர் முற்பண மீதியில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 33,620,223 மீதி உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிலும் குறித்த மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் குறித்த செலுத்த வேண்டிய தொகை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்டு கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சேவைநாடுநரின் முற்பண மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 05 வருட காலப்பகுதிக்கு மேலாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 4,541,250 தொகையான 554 காசோலைகளின் பெறுமதி மற்றும் 02 முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 6,602,258 தொகையான 570 காசோலைகளின் பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 11,898,232 தொகையான இரத்து செய்யப்பட்ட காசோலைகளின் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிலும் குறித்த மீதிகளை தீர்ப்பனவு | இத் தொகையானது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட காசோலைகளைக் கொண்டிருந்த போதிலும் அவர்களால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் காசோலைகள் எடுக்கப்பட்ட போதிலும் அவை வாடிக்கையாளர்களால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 5 ஆண்டுகளுக்கும் மேலாக இரத்து செய்யப்பட்ட | இரத்து செய்யப்பட்ட காசோலைகள் கணக்கின் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காசோலைகளின் பெறுமதியானது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்திற்கு இவ் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பரிந்துரைகளை பெற்றுக்கொண்ட பின்னர் 2021 ஆம் ஆண்டில் கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 2,268,386 தொகையான உரிமை கோரப்படாத கொடுப்பனவில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,208,728 உரிமை கோரப்படாத மீதி தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்திய பின்னர் மீளளிப்பதற்கு அல்லது ஏனைய முறையான கணக்கீட்டு நடவடிக்கையை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு காரணங்களால் இத் தொகைகள் செலுத்தப்பட்டிருக்காததுடன் தகவல்களை பெற்றுக்கொண்ட பின்னர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிமை கோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 54,208,495 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 50,628,651 தொகையான 2012 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்ட மீதியை இனங்காண்பதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு காரணங்களால் இத் தொகைகள் செலுத்தப்பட்டிருக்காததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய கணக்குகளின் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 1,687,956 தொகையான மீளளிக்கத்தக்க வைப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 855,707 தொகையான 112 மீளளிக்கத்தக்க வைப்புக்களின் கூட்டுமொத்தம் தொடர்பாக 3 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மீளளிப்பதற்கோ அல்லது ஏனைய முறையான கணக்கீட்டு நடவடிக்கையை எடுப்பதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரிவினால் நடவடிக்கைகளை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படாததுடன் ஏனைய பிரிவுகளால் சேவைகள் பெறப்படுகின்றன. எனவே, அப் பிரிவுகளால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் வைப்புக்களை மீளளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கணக்குகளில் மீதி காட்டப்படுகின்றது. | மீளளிக்கத்தக்க வைப்பு மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இனங்காணப்படாத கடன் மீதி ரூபா 1,253,409 ஆக காணப்பட்டதுடன் இது சேவைநாடுநரை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இனங்காணப்படாத கடன்கொடுத்தோர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சில சந்தர்ப்பங்களில், முக்கிய சேவைநாடுநர்களாக இல்லாத சில சேவைநாடுநர்களால் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்படுகின்றதுடன் குறிப்பிட்ட வைப்பு தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாததால் சேவைநாடுநரை கண்டுபிடிக்க முடியாத சில சந்தர்ப்பங்கள் உள்ளன. சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர்கள் மூலம் அத்தகைய சேவைநாடுநர்களைத் தேடுவதில் உள்ள சிக்கல் தீர்க்கப்படுகின்றது. | கடன் மீதிகளை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 02 ஆம் பந்தி | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக தலைவரின் தனிப்பட்ட மற்றும் உத்தியோகபூர்வ பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மேலதிகமாக 2020 ஆம் ஆண்டின் போது வாடகை வாகனமொன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. குறித்த வாகனத்தை வாடகைக்கு பெறுவதற்காக 2020 ஒக்தோபர் 29 முதல் 2021 ஒக்தோபர் 29 வரையான ஒரு வருட காலத்திற்கு தனியார் தரப்பினர் ஒருவருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தை | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு என்பது ITN, லகந்த, வசந்தம் FM மற்றும் வசந்தம் TV ஆகியவற்றின் வலையமைப்பாகும். அதற்கிணங்க தலைவர் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக தீவின் பல்வேறு பகுதிகளுக்கு பிரயாணம் செய்ய வேண்டும். இதற்கு மேலதிகமாக அமைச்சு, பிரதமர் அலுவலகம், சனாதிபதி செயலகம் போன்றவற்றுக்குச் செல்ல வேண்டிய அவசியம் உள்ளது. இதனால், மாதாந்தம் அதிக கிலோமீற்றர்கள் ஓட வேண்டியுள்ளதுடன் தலைவருக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகன இல.: | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக்கொள்வதற்கு முன்னர் வாகனம் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க எரிபொருளுக்காக ரூபா 291,249 தொகையும் 2020 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரையிலான காலப்பகுதிக்கான வாடகைக்காக ரூபா 1,143,742 தொகையுமாக ரூபா 1,434,991 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. | KV 6110 இல் அடிக்கடி இயந்திரப் பிழைகள் ஏற்படுகின்றன. எனவே சேவைத் தேவைப்பாட்டின் பிரகாரம் தலைவரிற்கு பொருத்தமான ஜீப் வாகனமொன்று பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய தொகை எரிபொருளாகவும் வாடகையாகவும் செலவிடப்பட்டது. | |
| (ii) | 02 மற்றும் 3.1 ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்காத மற்றும் உத்தியோகபூர்வ வாகனத்தின் உரிமையைப் பெற்றிருக்காத பதவிக்கு முறையற்றவாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிற்கு சாரதியின்றி நிறுவனத்திற்கு சொந்தமான வாகனம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் குறித்த உத்தியோகத்தரிற்கு மாதாந்தம் 140 லீற்றர் எரிபொருள் படி வழங்கப்பட்டிருந்தது. | அமைச்சரின் அறிவிப்பின் அடிப்படையில் அமைச்சில் அமுல்ப்படுத்தப்பட்ட ‘‘அசிதிசி பெரமக சௌபாக்யயே புனருதய’’ நிகழ்ச்சித்திட்டத்திற்கான சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக செயற்படுவதற்காக இவ் உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்த உத்தியோகபூர்வ வாகனமும் எரிபொருளும் குறித்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்படுகின்றன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 3.1 ஆம் பந்தி | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளுக்கு உரித்தற்ற 337 உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டின் போது போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 21,639,349 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஒரு அரச ஊடக அலைவரிசையானது இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் இரண்டு வானொலி அலைவரிசைகளைக் கொண்டுள்ளதால் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு 365 நாட்களும் 24 மணித்தியாலங்களும் செயற்பாடுகளை மேற்கொள்ளுகின்றது. கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்தச் சேவையை தொடர்ச்சியாகவும் திறம்படவும் மேற்கொள்வதற்காக ஊழியர்களுக்கு ஊக்கமளிக்கும் காரணியாக இப் படிகள் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டன. இந்த அளவுகோல்கள் ஊழியர்களின் நலன்புரி மற்றும் ஊக்குவிப்பிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. | |
| | | (ii) சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் தலைவர் பதவிக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் எல்லை 170 லீற்றராக காணப்பட்ட போதிலும் வலையமைப்பால் வழங்கப்பட்ட வாகனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி ரூபா 1,070,811 பெறுமதியான 6,651 லீற்றர்கள் வழங்கப்பட்டிருந்தது. நிதியாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை விஞ்சி ரூபா 241,955 பெறுமதியான 1,833 லீற்றர்களும் ரூபா 125,928 பெறுமதியான 954 லீற்றர்களும் முறையே பொது முகாமையாளர் (செய்திகள்) மற்றும் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) ஆகியோரால் பெறப்பட்டிருந்தன. | சபை பத்திரம் 334/33 இன் பிரகாரம் தலைவருக்கு மாதாந்தம் 700 லீற்றர் வரை அங்கீகாரம் பெறப்பட்டது, இதற்கு மேலதிகமாக இது அந்த மாதங்களில் உண்மையான பயன்பாட்டிற்காக வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. பொது முகாமையாளர்களால் அதிக எரிபொருள் பயன்படுத்தப்பட்டமைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது. மேற்படி எரிபொருளின் பயன்பாடானது 24 மணித்தியாலங்களில் 4 ஊடக அலைவரிசைகளை திறம்பட செயற்படுத்துவதற்காக ஏற்பட்ட எரிபொருள் செலவினங்களாகும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | 3.3 ஆம் பந்தி | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக HM 1-2 வகைக்கு உரித்துள்ள வலையமைப்பின் பிரதி பொது முகாமையாளர்களிற்கான போக்குவரத்து படிகளை வழங்குவதற்காக 2020 யூன் 26 ஆம் திகதிய 337/13 ஆம் இலக்க பணிப்பாளர் குழு தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டு போக்குவரத்து படிகள் எடுக்கப்பட்டிருந்தன. | நிறுவனத் தேவைப்பாட்டின் பிரகாரம் சேவையை நடாத்துவதற்காக பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க அமுல்ப்படுத்தப்படும் கொடுப்பனவு ஒன்றாக இது காணப்படுகின்றது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2020 திசெம்பர் 18 ஆம் திகதிய பிஈடி 03/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2018 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும் போது நட்டம் குறைக்கப்பட்டிருந்த அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகளில் நபர் ஒருவரிற்கு ரூபா 5000 தொகை செலுத்தப்பட முடியும் எனினும் 2019 ஆம் ஆண்டில் நட்டத்தை அறிக்கையிட்டிருந்த போதிலும் குறித்த தேவைப்பாட்டிற்கு முரணாக 2020 டிசம்பரில் நபரொருவரிற்கு ரூபா 13,000 படி 696 ஊழியர்களுக்கு ரூபா 9,046,000 தொகை வலையமைப்பு மூலம் செலுத்தப்பட்டிருந்தது. | முறைமையொன்றின் பிரகாரம் பதவியணியினரின் செயலாற்றலை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி ஊழியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வலையமைப்பால் செயலாற்றல் படி செலுத்தப்படுகின்றதுடன் பதவியணியினரிற்கான படிகள் நிறுவனத்தின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் செலுத்தப்பட்டது. இப் படி முன்னைய ஆண்டு இலாபத்தின் சதவீதத்திற்கு ஏற்ப செலுத்தப்பட்டது. ஊழியர்களின் நலனை மேம்படுத்துவதற்காக இப் படி செலுத்தப்படுகின்றது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2013 சனவரி 31 ஆம் திகதிய 02/2013 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) | அறிமுகப் பந்தி | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் வங்கி முன்பணம் செலுத்தும் அட்டையைப் பெற முடிந்த போதிலும் வலையமைப்பினால் இலங்கை வங்கியிடமிருந்து கடன் அட்டை ஒன்று பெறப்பட்டிருந்தது. | நிறுவனத் தேவைப்பாட்டின் அடிப்படையில் முன்பணம் செலுத்தும் அட்டை மூலம் இக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாததன் காரணமாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் வங்கிக் கடன் அட்டை பெறப்பட்டது. (பணிப்பாளர் சபை அங்கீகார இல. 324/12)<br><br>கடன் அட்டைகளைப் பயன்படுத்துவதற்கு அமைச்சின் ஊடாக பொது திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் கோரப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 03 ஆம் பந்தி | முன்பணம் செலுத்தும் அட்டைக்கு பெறப்படக்கூடிய ஆகக்கூடிய எல்லை ரூபா 100,000 ஆக காணப்பட்ட போதிலும் வலையமைப்பால் பெறப்பட்ட கடன் அட்டையின் ஆகக்கூடிய எல்லை ரூபா 900,000 ஆக காணப்பட்டது. | இது வங்கிக் கடன் அட்டை என்பதுடன் முன்பணம் செலுத்தும் அட்டை அல்ல என்பதால், நிறுவனத்தின் செலவினங்களின் தன்மைக்கு ஏற்ப பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆகக்கூடிய எல்லை தீர்மானிக்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 05 ஆம் பந்தி | வங்கி முன்பணம் செலுத்தும் அட்டை மூலம் கொடுப்பனவை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் வங்கி அட்டைக்கு பொறுப்பான உத்தியோகத்தரின் நேரடியான மேற்பார்வையை மேற்கொள்ளுகின்ற உத்தியோகத்தரின் தொலைபேசிக்கு கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கான குறுஞ்செய்தியைப் பெற்றுக்கொள்வதற்கான வசதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் வலையமைப்பால் பெறப்பட்டிருந்த கடன் அட்டையை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய வசதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன் அட்டையிலிருந்து பணம் செலுத்தும் போது, அட்டை வழங்கப்பட்ட உத்தியோகத்தரிற்கு செய்தி வழங்கப்படுகின்றதென வங்கி தெரிவித்திருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | 06 ஆம் பந்தி | முன்பணம் செலுத்தும் அட்டை மூலமான கொடுப்பனவுகளிற்காக பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டு படிமுறைகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இந்த அட்டை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முன்பணம் செலுத்தும் அட்டைக்கு பின்பற்றப்படும் முறைமையை இந்த கடன் அட்டைக்கு பயன்படுத்த முடியாததுடன் இந்த அட்டை மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களும் கணக்காய்விற்காக உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. செலவினங்களை மீளளிக்கும் நேரத்தில் செலவினக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.8 காசு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வலையமைப்பால் முன்னைய 4 ஆண்டு காலப்பகுதியின் போது நிலையான வைப்பில் ரூபா 25,000,000 தொகை மாத்திரம் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் குறித்த காலப்பகுதியின் போது ரூபா 1,428,973,398 பெறுமதியான நிலையான வைப்புக்கள் மீள பெறப்பட்டிருந்தன. காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் நிதிகளின் முதலீடுகளை | கருத்துரை வழங்கப்படவில்லை. | வலையமைப்பின் நிதி நிலைமையை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரிப்பதற்காகவும் தொழிற்படு மூலதன முகாமைத்துவத்திற்காகவும் நடவடிக்கைகளை எடுத்தல் நிதி முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ள போதிலும் சேவை நாடும் கடன்பட்டோரின் மீதிகளை வலையமைப்பின் பிரதான காசு உட்பாய்ச்சலாக அறவீடு செய்வதற்காக நடைமுறையிலுள்ள, சரியான மற்றும் வினைத்திறனான முறைமையொன்று வலையமைப்பால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியின் போது வைப்பிலிடப்பட்ட குறுங்கால மற்றும் நீண்டகால நிலையான வைப்புக்கள் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 326,513,275 மற்றும் ரூபா 604,748,994 ஆக வலையமைப்பால் காசாக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக, நிலையான வைப்புக்கள் முறையே 14 சதவீதம் மற்றும் 39 சதவீதத்தாலும் வட்டி வருமானம் முறையே 15 சதவீதம் மற்றும் 31 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வலையமைப்பின் நிதி நிலைமையை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 213,974,507 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 571,884,034 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 357,909,528 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 280,000,000 தொகையான அரசாங்க மானியம் பெறப்பட்டமை இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கான ரூபா 55,171,578 ஏனைய வருமானத்துடன் மீளாய்வாண்டிற்கான ரூபா 345,490,014 ஏனைய வருமானத்தை ஒப்பிடும் போது ஏனைய வருமானம் 526 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மீண்டெழும் செலவினங்களுக்காக பெறப்பட்ட ரூபா 280,000,000 தொகையான அரசாங்க மானியம் இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. மீளாய்வாண்டுக்கான தேறிய நட்டம் ரூபா 213,974,507 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 571,884,034 ஆக காணப்பட்டதால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய நட்டம் 63 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 357,909,527 ஆல் குறைவடைந்திருந்தது. நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் செலவினங்கள் முறையே 20 சதவீதம் மற்றும் 22 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன. நிதியாண்டிற்கான வரிச் செலவினங்கள் 40 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் தேறிய நிதி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 49 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. நிலையான வைப்புக்கள் காசாக்கப்பட்டதன் விளைவாக வட்டி வருமானம் குறைவடைந்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| | 2020 | 2019 |
|---|---|---|
| நடைமுறை சொத்துக்கள் விகிதம் (தடவைகள்) | 1.7 | 2 |
| விரைவு சொத்துக்கள் விகிதம் (தடவைகள்) | 1.6 | 1.98 |
| மொத்த இலாப விகிதம் | 94% | 60% |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆம் ஆண்டின் போது வலையமைப்பின் முன்னாள் ஊழியர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மோசடியில் இருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,210,620 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் முழுப் பெறுமதிக்கும் நட்டக்கழிவு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மோசடியின் மொத்த பெறுமதி ரூபா 2,009,620 ஆகும். 2007 ஆம் ஆண்டில் குறித்த தொகையை அறவீடு செய்வதற்காக நீதிமன்றங்களில் சட்ட வழக்கொன்று தொடரப்பட்டது. அதற்கிணங்க அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்ததுடன் மொத்த தொகையில் ரூபா 799,000 தொகை செலுத்தப்பட்டது. ரூபா 1,210,620 மிகுதி தொகை அறவிடப்பட வேண்டும். மிகுதியை அறவீடு செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த போதிலும் அவருக்குச் சொந்தமான ஆதனம் எதுவும் இல்லாததன் காரணமாக அதை அமுல்ப்படுத்த முடியாதிருந்தது. ஆகையால் முழுத் தொகைக்கும் நட்டக்கழிவு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தாமதமின்றி அறவீட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தணிக்கை குழுவின் (Pre view Committee) பரிந்துரைகளின் அடிப்படையில் தொலைக்காட்சி நாடகங்கள் ஒளிபரப்புவதற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அக் குழு பரிந்துரைத்த காலப்பகுதியில் நாடகங்கள் | தொலைக்காட்சி நாடக தணிக்கை குழு என்பது சுயாதீனமான குழுவொன்றாக உள்ளதுடன் அவை தொலைக்காட்சி நாடகம் தொடர்பாக மாத்திரமே சுயாதீனமான | நட்டங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒளிபரப்பப்பட்டிருக்காத சம்பவங்களும், தணிக்கை குழுவால் குறித்த சில நாடகங்களை ஒளிபரப்பு செய்வதற்கு பொருத்தமான காலம் பரிந்துரைக்கப்பட்டிருக்காத சம்பவங்களும் காணப்பட்டன. ஆகையால் கொள்வனவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் பொருத்தமான காலத்தில் ஒளிபரப்பப்படாததன் விளைவாக இலாபம் ஈட்டுவதற்கான வாய்ப்புகள் தவறவிடப்பட்டிருந்தன. | அபிப்பிராயமொன்றை வழங்குகின்றன.<br>தொலைக்காட்சி நாடகங்களை கொள்வனவு செய்யும் மற்றும் வான்காலத்தை தீர்மானிக்கும் அதிகாரம் முகாமைத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்ட கொள்வானவு குழுவிற்கு சொந்தமானது என தெரிவிக்கப்பட்டது. தனியார் அலைவரிசைகளின் போட்டி மற்றும் நாட்டில் நிலவும் கொவிட் 19 சூழ்நிலை காரணமாக நட்டம் ஏற்பட்டிருந்தது. | |
| (ஆ) | தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்புவதற்கு தெரிவுசெய்யும் போது தணிக்கை குழுவால் C வகைப்படுத்தலின் கீழ் தொலைக்காட்சி நாடகங்கள் வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் C வகைப்படுத்தலிற்கான அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டம் தொலைக்காட்சி நாடகங்களை கொள்வனவு செய்யும் முறையில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டின் போது ஒளிபரப்பப்பட்ட 25 தொலைக்காட்சி நாடகங்களில் 07 தொலைக்காட்சி நாடகங்களின் 378 அத்தியாயங்கள் C வகைப்படுத்தலின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு இது தொடர்பாக வெவ்வேறு கட்டணங்களின் கீழ் ரூபா 76,500,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நாடகமொன்றின் அத்தியாயம் (episode) ஒன்றின் விலையை தீர்மானிக்கும் அதிகாரம் நிகழ்ச்சித்திட்ட கொள்வனவுக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும், பணிப்பாளர் சபை அறிக்கை இல. 331/15 (2019/11/05) மூலம் குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br>தொலைக்காட்சி நாடகமொன்றின் விலையைத் தீர்மானிக்கும் போது, அந்தக் குழுவானது குறித்த நாடகத்தின் கிரயம், தரம், பெறக்கூடிய வருமானம் போன்றவற்றைக் கருத்தில் கொள்கின்றது. | தொலைக்காட்சி நாடகங்களை கொளவனவு செய்யும் முறை முறைப்படுத்தப்பட்டு அதன் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலையமைப்பிற்கு எதிராக அவமதிப்பு நட்டஈட்டிற்காக மூன்று சட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் கோரப்பட்ட நட்டஈடு ரூபா 105,000,000 ஆக காணப்பட்டது. மேலும் இலங்கையில் ஊடகங்கள் மூலம் திரைப்படத்தை திரையிட்டு, விநியோகித்து, விற்பனை செய்யும் உரிமைகள் மீறப்பட்டதற்கு எதிராக 06 வழக்குகளும், திரைப்பட புலமைச் | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பெறுமதிகள் சரியானவை என்பதை சட்ட உத்தியோகத்தர் உறுதிப்படுத்தியிருந்தார். | வலையமைப்பிற்கு நட்டம் ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

சொத்துக்களுக்காக 06 வழக்குகளும் வலையமைப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் கோரப்பட்ட நட்டஈடு ரூபா 510,325,000 ஆக காணப்பட்டது. சேவையை நீக்குதல், சேவையை முடிவுறுத்துதல் மற்றும் கட்டாய ஓய்வு பெறுதல் ஆகிய 8 வழக்குகளும், ஏனைய விடயங்களுக்காக மூன்று வழக்குகளும் வலையமைப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 3,321,250 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ITN அலைவரிசையால் இருபத்தியொரு தொலைக்காட்சி நாடகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 13 தொலைக்காட்சி நாடகங்களில் இருந்து ரூபா 60,965,986 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் தொலைக்காட்சி நாடகங்களை கொள்வனவு செய்யும் போது அத்தியாயமொன்றிற்கு செலுத்த வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட விலைவிகிதங்களை விஞ்சி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது 6 நாடகங்களுக்கு ரூபா 15,565,000 தொகை மேலதிகமாக லெுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் மொத்த வருமானத்தை மதிப்பிடும் போது, தொலைக்காட்சி நாடகங்கள், செய்தி ஒளிபரப்புகள், திரைப்படங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளின் சதவீதமாக மதிப்பிடப்படுகின்றது. அதில், தொலைக்காட்சி நாடகங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்ட வான் காலம் ஒதுக்கப்பட்டதால் தொலைக்காட்சி நாடகங்கள் மொத்த வருமானத்தில் மிகச் சிறிய சதவீதமொன்றையே உருவாக்குகின்றன. அரச உடமையாக்கப்பட்ட நிறுவனம் என்பதால், ஏனைய தனியார் அலைவரிசைகளை போல தரம் குறைந்த தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்புவதற்கும், கலாச்சாரம் மற்றும் ஒழுக்கநெறிகளைத் தவிர்த்து வருமானத்தை ஈட்டுவதற்குமான திறனை இது கொண்டிருக்காததால் போட்டி நிலவும் சூழ்நிலையில் அனைத்து தொலைக்காட்சி நாடகங்களிலிருந்தும் இலாபத்தை ஈட்ட முடியாதிருந்தது.<br><br>தொலைக்காட்சி நாடகங்களின் விலையை தீர்மானிப்பதற்கு முன் அங்கீகரிக்கப்பட்ட விலைவிகிதம் காணப்பவில்லை. நிகழ்ச்சித்திட்ட | தொலைக்காட்சி நாடகங்களை கொள்வனவு செய்வதற்கு முறையான மற்றும் வெளிப்படையான வழி பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்வனவுக் குழுவால் ஒவ்வொரு நாடகத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட விலைவிகிதங்களின் பிரகாரம் விலை தீர்மானிக்கப்படுகிறது. இந்த 6 நாடகங்களுக்கும் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விலை செலுத்தப்பட்டது. ஆகையால் மேலதிகக் கொடுப்பனவு காணப்படவில்லை. | |
| (ஆ) | உரிய காலப்பகுதியினுள் மின்சார விலைப்பட்டியல்களை செலுத்துவதற்கு வலையமைப்பினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை, இதன் விளைவாக மீளாய்வாண்டின் போது ரூபா 348,279 தொகை தாமதக் கட்டணங்களாக தண்டப்பணங்களாக செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த தண்டப்பணங்களின் பகுப்பாய்வு பின்வருமாறு.<br><br>யட்டியந்தோட்டை ரூபா 230,797<br>நயபத்த ரூபா 6,592<br>ஹுன்னஸ்கிரிய ரூபா 4,041<br>விக்கிரமசிங்கபூர் ரூபா 106,849<br>ரூபா 348,279<br>==========<br><br>இந் நிலுவைத் தொகையில் ரூபா 230,797 தொகை யட்டியந்தோட்டை நிலையத்தின் மின்சார விலைப்பட்டியலிற்கான தண்டப்பணத்துடன் தொடர்புடையதாகும். நிலுவையாகவுள்ள மின்சார விலைப்பட்டியல் தொடர்பில் இத் தண்டப்பணம் ஏற்படுகின்றதுடன் இது மாதாந்த விலைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டு அடுத்த மாத விலைப்பட்டியலில் இருந்து தண்டப்பணம் கழிக்கப்படுவதன் காரணமாக இந்த ரூபா 230,797 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று நயபெத்த மற்றும் ஹுன்னஸ்கிரிய தொடர்பான தண்டப்பணங்களும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>எனினும், விக்கிரமசிங்கபுர தலைமை அலுவலகத்திற்கு விதிக்கப்பட்ட தண்டப்பணம் 2020 மே மாதத்திற்கு ரூபா 51,757 ஆகவும் யூன் மாதத்திற்கு ரூபா 55,092 ஆகவும் காணப்பட்டன. இக் காலப்பகுதியில் நாட்டில் பரவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் நிறுவனத்தில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக கொடுப்பனவுகள் சில நாட்கள் தாமதமாகியிருந்ததால் | மின்சார விலைப்பட்டியல்கள் உரிய காலத்தினுள் செலுத்தப்பட வேண்டும். |

தண்டப்பணம் விதிக்கப்படுகிறது. அதன் பிரகாரம் மே மற்றும் யூன் மாதங்களுக்கு தண்டப்பணங்கள் செலுத்தப்பட வேண்டியிருந்தன.

### 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் போது வலையமைப்பால் ரூபா 1,588,500 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட Hot Swappable Power Distribution Rack கொள்வனவு திகதியிலிருந்தும் 2010 ஆம் ஆண்டில் ரூபா 1,218,274 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட ArosFlexus FT-30, 30KVA UPS முறைமைகள் 3 வருட காலப்பகுதியிலிருந்தும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன. | Hot Swappable Power Distribution Rack தொடர்பானது<br><br>இந்த distribution board 2015 ஆம் ஆண்டில் நிறுவகத்திற்கு கிடைத்த போதிலும் 2014 ஆம் ஆண்டிலேயே கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. அக் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் பிரகாரம் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக இக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்ட புதிய அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம் அக் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பெரும்பாலான செயற்திட்டங்களுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததுடன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் இந்த அனர்த்த மீட்பு சேவையக (server room) செயற்திட்டம் கைவிடப்பட்டதுடன் செயற்திட்டத்தை ஆரம்பித்து அமுல்ப்படுத்தியிருந்த பொறியியலாளர்கள் நிறுவனத்தை விட்டு வெளியேறியிருந்தனர். அதன் பின்னர் குறித்த செயற்திட்டம் பல ஆண்டுகளாக விளைவற்ற நிலையில் காணப்பட்டதுடன் அந்நேரத்தில் நிறுவப்பட்ட உபகரணங்கள் தற்காலிக அடிப்படையில் நிறுவப்பட்டு அப்படியே உள்ளன. புதிய நிர்வாகம் பிரதான கட்டிடத்தின் ஒரு பகுதியில் சேவையகத்தை நிறுவுவதற்கு இணங்கியிருந்ததுடன் குறித்த வளாகங்கள் சேவையகத்திற்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டு, அனைத்து சிவில் வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு, Hot Swappable Power Distribution Rack நிறுவப்பட்டது. அமைச்சின் உத்தியோகத்தர்கள் சிலரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. உரிய உபகரணங்கள் கிடைத்தவுடன் மின்சார இணைப்பை வழங்க முடியும். கொவிட் தொற்றுநோய் காரணமாக நிறுவனத்தின் நிதி நிலைமை சாதகமான நிலையில் | சொத்துக்கள் முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

காணப்படவில்லை, ஆகையால் அனைத்து அத்தியாவசியமற்ற கொள்வனவுகள் மற்றும் செயற்திட்டங்கள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வலையமைப்பின் தலைவரின் பயன்பாட்டிற்காக வாடகைக்கு வாகனம் வழங்குதல் தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | அரசாங்க பெறுகை வழிகாட்டல் 2006 இன் 3.4.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கடை முறையின் கீழ் கூறுவிலைகளை கோரும் போது நிறுவனத்தில் பதிவு செய்திருந்த வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டிருக்காததுடன் ஏனைய 9 வெளி நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. | மேற்படி விடயத்திற்காக கூறுவிலைகளை கோருவதற்கு நிறுவனத்தில் வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டிருக்காததன் காரணமாக போக்குவரத்துப் பிரிவின் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட 8 நிறுவனங்களிடமிருந்து மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் கடை முறையின் கீழ் கூறுவிலைகள் கோரப்பட்டன. அரசாங்க பெறுகை வழிகாட்டி 2006 இன் 3.4.5 ஆம் வழிகாட்டலின் கீழ் தொலைபேசி கையேட்டின் (Telephone Directory) மஞ்சள் பக்கங்கள் மற்றும் வானவில் பக்கங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகளை கோருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போக்குவரத்துப் பிரிவின் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட பெரும்பாலான நிறுவனங்கள் வானவில் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. | அரசாங்க பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | கூறுவிலைகள் கோரப்பட்ட 9 நிறுவனங்களில், கூறுவிலைகளை ஏற்றுக்கொள்ளுதல் ஒரு நிறுவனத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது. வழங்குநர்கள் தொடர்பாக முதலாவது முன்மொழிவு | 2020 செப்தெம்பர் 18 இல் கூறுவிலைகளை சமர்ப்பித்திருந்த 8 நிறுவனங்களில் ஒரு நிறுவனத்தால் கூறுவிலை நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் மேற்படி நிறுவனத்திற்கு பதிலாக கூறுவிலைகளை கோருவதற்காக | பெறுகை நடைமுறை வெளிப்படைத் தன்மையுடன் காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டதிலிருந்து 11 நாட்களுக்குப் பின்னர் கூறுவிலையை நிராகரித்திருந்த மேற்படி நிறுவனத்திற்குப் பதிலாக 2020 செப்தெம்பர் 22 இல் இன்னொரு நிறுவனம் முன்மொழியப்பட்டிருந்ததுடன் குறித்த நிறுவனத்திலிருந்து கூறுவிலைகளை கோருவதற்கு போக்குவரத்துப் பிரிவின் தலைவரால் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட 9 கூறுவிலைகளில் 8 நிறுவனங்களால் கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், அந்த நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கூறுவிலைகளை கருத்தில் கொள்வதற்கு பதிலாக முதலாவது கூறுவிலை வழங்கப்பட்டதிலிருந்து 11 நாட்களுக்குப் பின்னர் இன்னொரு நிறுவனம் முன்மொழியப்பட்டு பரிந்துரைக்கப்பட்டிருந்த விடயமானது இப் பெறுகை செயன்முறையின் வெளிப்படைத்தன்மை தொடர்பாக சர்ச்சைக்குரிய விடயமாக உள்ளது. | பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்துடன் இன்னொரு நிறுவனம் 2020 செப்தெம்பர் 22 ஆம் திகதிய போக்குவரத்துப் பிரிவின் தலைவரின் கடிதம் மூலம் முன்மொழியப்பட்டது. ஆகையால் 2020 செப்தெம்பர் 22 இல் அந்த நிறுவனத்திடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டன. 2020 செப்தெம்பர் 19 மற்றும் 20 வார இறுதி நாட்கள் என்பதால் 2 நாட்களுக்குள் கூறுவிலைகள் கோரப்பட்டன. ஆகையால் 11 நாட்களின் பின்னர் கேள்வி கோரப்பட்டது என்று கூறுவது தவறானதாகும். | |
| (iii) | குறித்த நிறுவனத்தில் இருந்து சேவையை வழங்குவதற்கான முன்மொழிவு போக்குவரத்துப் பிரிவின் தலைவரால் 2020 செப்தெம்பர் 22 இல் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் 4 நாட்களுக்கு முன்னர் செப்தெம்பர் 18 இல் முன்மொழியப்பட்ட நிறுவனத்திற்கு கேள்வி அழைப்பு கையளிக்கப்பட்டிருந்தது. | முதலாவது கடிதத்தின் புகைப்பட பிரதி விடய எழுத்தாளரால் எடுக்கப்பட்டு 2020 செப்தெம்பர் 22 ஆம் திகதிய போக்குவரத்துப் பிரிவின் தலைவரின் கடிதத்தின் பிரகாரம் பின்னர் முன்மொழியப்பட்ட குறித்த நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது, ஆகையால் அக் கடிதத்தின் திகதி 2020 செப்தெம்பர் 18 ஆகக் குறிப்பிடப்பட்டது. | பெறுகை நடைமுறை வெளிப்படைத் தன்மையுடன் காணப்பட வேண்டும். |
| (iv) | இந்நிறுவனம் 2020 செப்தெம்பர் 21 இல் தனியார் கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டு, அடுத்த நாள் அதாவது 2020 செப்தெம்பர் 22 இல் முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. | கூறுவிலைகள் கோரப்பட்ட திகதியான 2020 செப்தெம்பர் 22 இல் உள்ளவாறு குறித்த நிறுவனம் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாக காணப்பட்டதால் கூறுவிலை அங்கீகரிக்கப்பட்டது. | பெறுகை நடைமுறை வெளிப்படைத் தன்மையுடன் காணப்பட வேண்டும். |
| (v) | இணையதளத்தில் பரீட்சித்த போது இந்நிறுவனம் போக்குவரத்து சேவைகளை வழங்குகின்ற நிறுவனமொன்றாக காணப்படாத போதிலும் ஸ்ரூடியோக்களில் | அவர்கள் ஒரு வணிகமாக வாகனங்களை வழங்குகின்றதுடன் நிறுவனத்திற்கு மிகவும் சாதகமான விலையைக் | பெறுகை நடைமுறை வெளிப்படைத் தன்மையுடன் காணப்பட |

| | | | |
|---|---|---|---|
| | புகைப்படம் சார்ந்தவற்றில் ஈடுபடுகின்றதுடன் கமரா உபகரணங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டது. | கொண்டிருப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டு அவர்கள் கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். | வேண்டும். |
| (vi) | 6 கேள்விதாரர்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் குறைந்த விலைமனுவானது தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை எனக் குறிப்பிட்டு அவ் விலைமனு நிராகரிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது குறைந்த கேள்விதாரரால் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்தது, ஆகையால் மூன்றாவது குறைந்த கேள்விதாரரிற்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு 2020 ஒக்தோபர் 23 இல் பெறுகைக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு 2020 ஒக்தோபர் 23 இல் பெறுகைக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. | பெறுகை நடைமுறை வெளிப்படைத் தன்மையுடன் காணப்பட வேண்டும். |
| (vii) | ஒப்பந்தத்தை மூன்றாவது குறைந்த கேள்விதாரரான குறித்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கு 2020 ஒக்தோபர் 23 இல் பெறுகைக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த நிறுவனத்தால் தமது நிறுவனத்தைத் தெரிவுசெய்தமைக்கு நன்றி தெரிவித்து 2020 ஒக்தோபர் 09 இல் வலையமைப்பின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது. ஒப்பந்தம் வழங்குவதற்கான பெறுகைக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு முன்னர் ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்திற்கு தகுதியானவர் என்று ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது. | இக் கடிதம் 2020.10.09 இல் வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்த நேரத்தில் குறித்த கேள்வியின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வந்தது, ஆகையால் கேள்வியை வழங்குவதற்கான தீர்மானம் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க தவறான புரிதலின் காரணமாக இவ் வழங்குநரால் கடிதத்தில் இந்த உட்பிரிவு உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. | பெறுகை நடைமுறை வெளிப்படைத் தன்மையுடன் காணப்பட வேண்டும். |
| (viii) | மேலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது கேள்விதாரர்களால் இரண்டு நிறுவனங்களாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மூன்றாவது குறைந்த கேள்விதாரர் விபத்துக்குள்ளான வாகனத்திற்குப் | மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் குறைந்த விலைமனுவை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்காக பரிந்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை, ஏனெனில் அது | பெறுகை நடைமுறை வெளிப்படைத் தன்மையுடன் காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிலாக வேறொரு வாகனம் ஒதுக்கப்பட்டுள்ளதென மேற்படி கடிதத்தின் மூலம் அறிவித்திருந்தார். அதற்கிணங்க இரண்டாவது மற்றும் மூன்றாவது மிகக் குறைந்த விலைமனுக்களை சமர்ப்பித்திருந்த நிறுவனங்கள் எவை என்பதை இனங்காணுதல் கணக்காய்வின் போது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. | குறிப்புரைகளுடன் பொருந்தியிருக்கவில்லை. இரண்டாவது குறைந்த விலைமனுவை சமர்ப்பித்திருந்தவரின் வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்ததால், வாகனத்தை வழங்குவதற்கு சிறிது காலம் எடுத்ததாக தெரிவிக்கப்பட்டது. ஆகையால் அந்த விலைமனுவும் பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை. அது புகைப்படங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மூன்றாவது குறைந்த விலைமனுவை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு கேள்வியை வழங்குவதற்கு மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டது. | |
| (ix) | பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தை வழங்குவதற்கு முன்னரும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னரும், வாகனம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது, 2020 ஒக்தோபர் 15 முதல் 2020 ஒக்தோபர் 28 வரையிலான காலப்பகுதியில் பெறப்பட்ட சேவைக்காக வலையமைப்பால் ரூபா 123,662 தொகை செலவிடப்பட்டிருந்தது. | பெறுகை செயன்முறையை பூர்த்தி செய்வதற்கும் வாகனத்தின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும் தாமதம் ஏற்பட்டிருந்ததன் காரணமாக அவசர தேவைப்பாட்டிற்காக மட்டுப்படுத்தப்பட்ட காலத்திற்கு நேரடி பெறுகையொன்றாக இச் சேவை பெறப்பட்டது. மேற்படி கூறுவிலைகளை கோரும் போது அதிகபட்ச வெளிப்படைத்தன்மையை பேணக்கூடியவாறு போட்டி கேள்விகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் வழங்குநர்கள் கலந்து கொண்ட கேள்வி திறத்தல் குழுவின் முன் சீல் செய்யப்பட்ட கூறுவிலைகள் திறக்கப்பட்டன. | பெறுகை நடைமுறை வெளிப்படைத் தன்மையுடன் காணப்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 மே 8 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் டிஎம்எஸ்/1590/வீஓஎல் II ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பிற்கான பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த | ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டதுடன், இது தொடர்பான அனுமதியை வழங்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் | ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத்தின் பிரகாரம் முன்மொழியப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 வரையிலும் அதனை அங்கீகரித்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | 2018 மே 8 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் டிஎம்எஸ்/1590/வீஓஎல் II ஆம் இலக்க கடிதத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் புதிய ஆட்சேர்ப்பை மேற்கொள்ளும் போது அந்த பதவிகளின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான நடைமுறைகள் திருத்தப்பட்டு ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு முன்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காத 3 புதிய பதவிகளுக்கு வலையமைப்பால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வலையமைப்பின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் இந்நியமனம் மேற்கொள்ளப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வலையமைப்புக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருந்த பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவிக்காக தனிப்பட்ட முறையில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் 5 பேர் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். எனினும், ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தரால் பூர்த்தி செய்யப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்களை நிரூபிப்பதற்கான சான்றுகள் தனிநபர் கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஊடகங்கள் மூலம் பெரும் விளம்பரம் கொடுத்து, நிரந்தர அடிப்படையில் மிகவும் பொருத்தமான நபரை பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் | வலையமைப்பின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் இந்நியமனம் மேற்கொள்ளப்பட்டது. | ஆட்சேர்ப்புக்கள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் மிகவும் பொருத்தமான நபரை பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அத்துடன் தனிநபர் கோவைகள் முறையாக பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்காததுடன் இந்த ஆட்சேர்ப்பின் வெளிப்படைத்தன்மை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது. | | |
| (ஈ) | 2018 மே 8 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் டிஎம்எஸ்/1590/வீஓஎல் II ஆம் இலக்க கடிதத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் புதிய ஆட்சேர்ப்புத் திட்டங்களின் கீழ் உள்வாங்கப்படுவதற்கு தகுதி பெற்றிருக்காத ஊழியர்களுக்காக அவர்களின் தற்போதைய பதவிநிலைகளை அவர்கள் தனிப்பட்ட முறையில் பேண வேண்டும். இன்னொரு பதவிக்கு பதவி உயர்வு பெற்ற பின்னர் அல்லது ஓய்வு பெற்ற பின்னர் பதவியை முடிவுறுத்த வேண்டும். எவ்வாறாயினும், அத் தேவைப்பாட்டிற்கு முரணாக 2020 ஆம் ஆண்டில் இப் பதவிகளுக்காக 56 உத்தியோகத்தர்கள் வலையமைப்பினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஆட்சேர்ப்பு திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்காததால் உரிய பதவிகளிற்கு ஊழியர்கள் முறையாக உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. 2018 மே 8 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் டிஎம்எஸ்/1590/வீஓஎல் II ஆம் இலக்க கடிதத்தின் 06 ஆம் பந்திக்கு முரணாக ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் வலையமைப்பின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடங்கிய பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 34 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படாத 4 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | எம்ஈடி/பீ/ஜரீஎன்/2020/பீ/ஏ.கியூ.4 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவின் இல. 7(அ) மற்றும் (ஆ) இற்காக வழங்கப்பட்ட பதில்கள் இதற்குப் பொருந்துகின்றன. | நிரந்தர பதவியணியின் பதவிகளிற்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். |